07.08.2024

OS No: 73/2022

வா.சா. 2 திரு.ராமசாமி

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

எனது 3வது மகனுக்கு சுமார் 9 வருடத்திற்கு முன்பு திருமணம் செய்து வைத்தேன். 3வது மகனுக்கு திருமணம் செய்து வைக்கும் காலம் வரை நாங்கள் கூட்டு குடும்பமாக இருந்தோம் என்றால் நானும் மற்ற 2 மகன்கள் மட்டும் ஒன்றாக இருந்தோம். 30.07.2021 அ ன்று நான் கோயம்புத்தூரில் இருந்தேனா என்றால் இருந்தேன். கோயம்புத்தூரில் நான் சுமார் 3 மாதம் தொடர்ந்து இருப்பேன் பின்னர் இங்கு வந்து விடுவேன். 2 வது மருமகள் ராகவிக்கு முழு சொத்தினையும் கிரையப்பத்திரம் செய்து கொடுத்தற்கு தனிப்பட்ட காரணம் என்ன என்றால் 2 வது மகன் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பியதை வைத்து சொத்து வாங்கியதால் 2 வது மருமகளுக்கு கிரையம் செய்து கொடுத்தேன். நான் சொத்து வாங்கியதற்கு 1வருடம் முன்பாக எனது 2வது மகன் வெளிநாடு சென்றான். எனது 2வது மகனை எனது மூத்த மகன் தான் வெளிநாட்டிற்கு வேலைக்கு கூட்டி சென்றார். 2வது மகன் வெளிநாடு செல்வதற்கு முன்பாக மூத்த மகன் 3 வருடத்திற்கு முன்பாகவே வேலைக்கு வெளிநாடு சென்று விட்டார். மூத்த மகன் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பியதை வைத்து தான் குடும்பத்தின் மூத்தவர் என்பவர் என்ற முறையில் என் பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து மொத்தம் 12 செண்டினை 3 மகன்களும் தலா 4 செண்ட் என பிரித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் வடபுறத்தில் உ ள்ள 4 செண்டில் பிரதிவாதியின் கணவர் பணம் அனுப்பி இந்த பிரதிவாதிதான் கடை கட்டி மற்றும் மாட்டுக்கொட்டகை கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி கடை கட்டி சுமார் 10 வருடம் இருக்கும் என்றால் 6, 7 வருடம் இருக்கும். எனது மூத்த மருமகள் பிரதிவாதி எனது குடிபழக்கத்தினை கண்டித்தாதல் தான் கோபம் கொண்டு வாதிக்கு முழு சொத்தினையும் கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. ரூ80,000/- க்கு வாதிக்கு தாவா சொத்தினை கிரையம் கொடுத்தேன். தாவா சொத்து மெயின் ரோட்டில் இருக்கிறது என்றால் சரிதான். தாவா சொத்து தற்போது செண்டு சுமார் ரூ 50,000/- க்கு விலை போகும் என்றால் சரிதான். வாதியின் கணவர் எனக்கு பணம் அனுப்பியதாக

சொல்வது தவறு என்றும் வாதி என்னை ஏமாற்றி தாவா  சொத்தினை கிரையம் செய்து கொண்டார் என்றார் சரியல்ல.  வாதிக்கு தாவா சொத்து முழுவதும் பாத்தியம் கிடையாது. தாவா சொத்தின் மத்தியில் 4  செண்ட் மட்டும் தான் வாதிக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. மற்ற எனது மகன்களுக்கு தாவா சொத்தில் 4 செண்ட் பாத்தியம் என்றும் அதை அவர்கள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2024.08.07 17:26:08 +0530